**9101** பதிவு எண் | | | | | | | | |

# அரையாண்டு பொதுத் தேர்வு, டிசம்பர் - 2018

பத்தாம் வகுப்பு

நேரம் : 2½ மணி] தமிழ் - முதல் தாள் [மொத்த மதிப்பெண்கள் : 100

(செய்யுள், உரைநடை)

**Language - Part A - Tamil - Paper I**

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின், அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் 49க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

பிரிவு-I (மதிப்பெண்கள் : 20) பகுதி - 1

I உரிய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக : 6×1=6

1. சரசுவதி அந்தாதி ----- இயற்றிய நூல்களுள் ஒன்று.
   அ) கம்பர் ஆ) ஒட்டக்கூத்தர் இ) புகழேந்தி
2. ‘வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே’ எனப் பாடியவர் :
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா
3. ‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’ என வழங்கப்பெறும் நூல்
   அ) கம்பராமாயணம் ஆ) சீறாப்புராணம் இ) சிலப்பதிகாரம்
4. ‘உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்’ எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் : அ) கந்தபுராணம் ஆ) சீறாப்புராணம் இ) பெரியபுராணம்
5. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது :
   அ) பத்மஸ்ரீ ஆ) பாரதரத்னா இ) பத்மவிபூஷண்
6. ‘அறிவு அற்றம் காக்கும் கருவி’ என்று கூறியவர் :
   அ) கம்பர் ஆ) பாரதியார் இ) திருவள்ளுவர்

II கோடிட்ட இடத்தை நிரப்புக : பகுதி - 2 6×1 =6

7. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் -------.
8. ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’ எனச் சிறப்பித்துக் கூறும் நூல் -------.
9. தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் --------.
10. காந்தியடிகள் ----- நூலைப் படித்து பெற்றோரிடம் அன்பு செலுத்த விரும்பினார்.
11. கருத்துப் படம் அமைக்கத் தொடங்கியவர் -------.
12. இராமலிங்கர் சத்திய தருமச் சாலையை நிறுவிய இடம் --------.

III பொருத்துக : பகுதி-3 4×1 =4

13. புயல் - சிங்கம்
14. கேசரி - படகு
15. பணை - மேகம்
16. அம்பி - மூங்கில்

IV விடைக்கேற்ற வினா அமைக்கவும் : பகுதி-4 4×1 =4

17. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள்.
18. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளிஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
19. ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ என்பார் திருமூலர்.
20. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி தமிழ்.

பிரிவு-II (மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1 5×2 =10

V கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் :

21. ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர் ?
22. நும் பாடப்பகுதியிலுள்ள ஏலாதிப்பாடல் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளது?
23. குகன் விருப்பத்துடன் கொண்டுவந்ததாகக் கூறியவை யாவை? யாருக்கு கொண்டு வந்தான்?
24. அப்பூதியடிகள் எத்தகைய குற்றங்களை நீக்கி வாழ்ந்தார் ?
25. வேந்தர்க்குரிய பொருள்கள் யாவை ?
26. வயலின் வரப்புகளாகத் தமிழ்விடு தூது கூறுவனவற்றைப் பட்டியலிடுக.
27. நந்திக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது ?

பகுதி - 2 5×2 =10

VI கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க :

28. தமிழ் மொழியின் முப்பெரும் பிரிவுகளை எழுதுக.

திருப்புக

29. விளக்கப்படத்தினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
30. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?
31. 'அந்தகக்கேணியும் எந்திரக் கிணறும்' என்னும் பெருங்கதை வரிகள் உணர்த்தும் செய்தி யாது?
32. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?
33. வள்ளலார் சத்திய தருமச் சாலையை நிறுவக் காரணம் யாது ?
34. தொழிற்கல்வித் துறைகள் யாவை ?

பிரிவு-III (மதிப்பெண்கள் : 24)

பகுதி - 1

VII கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் : 3×4 =12

35. 'எளிய நடையில் தமிழ்நூல்' எனத் தொடங்கி 'நாணிடவும் வேண்டும்' என முடியும் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தமிழ் வளர்ச்சி பாடலில் பாவேந்தர் பாரதிதாசன் கூறியுள்ள கருத்துகளை எழுதுக.
36. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணை பாடல்வழித் தொகுத்தெழுதுக.
37. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?
38. 'பூத்தது மானுடம்' என்னும் கவிதைத் தொகுப்பில் சாதனைப் பூக்களாக இளந்திரையனார் கூறுவனவற்றைச் சுட்டுக.
39. முகம்மது நபி வருவதைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

பகுதி - 2

VIII கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3×4 =12

40. 'சமூக மாற்றத்திற்கு பெண் கல்வி அவசியம்' - விளக்குக.
41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?
42. பேச்சு, மேடைப்பேச்சு - வேறுபடுத்துக.
43. கடல் வாணிகத்தில் தமிழர் எவ்வாறு சிறந்திருந்தனர் ?
44. 'உலகோர் அனைவரும் மனிதப் பண்புகள் பெற்றிருந்தால் நல்ல சமுதாயமாக மாறும்' என்ற காந்தியடிகளின் கூற்றினை விவரிக்கவும்.

பிரிவு-IV (மதிப்பெண்கள் : 10)

IX கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5×1 =5

45. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர்.
   i) இப்பாடலில் இடம்பெற்றுள்ள புலவர்களின் பெயரை எழுதுக.
   ii) செவியறுத்து - இலக்கணக் குறிப்பு தருக.
   iii) சீத்தையர் - பொருள் தருக.
   iv) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
   v) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5×1 =5

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனிஇனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா தனிநாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர். உழவையும் தொழிலையும் மதித்திருந்தனர். வினையை ஆடவர் உயிராகக் கருதினர்; சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர். விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்; ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

   i) தமிழர் எத்தகைய பண்புகளால் சிறந்திருந்தனர் ?
   ii) கல்வியின் முடிவு யாது ?
   iii) புகழ், பழி குறித்துக் கூறப்படுவன யாவை ?
   iv) தமிழர் நாகரிகம் என்பன யாவை ?
   v) ஆடவர் உயிராகக் கருதப்படுவன யாவை ?

பிரிவு-V (மதிப்பெண்கள் : 26) பகுதி - 1

X கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 2×8=16

47. அ) பொருளை ஆக்குவதற்கும் காப்பதற்குமான செயல்முறைகளாக வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக (அல்லது)
   ஆ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக எழுதுக.
48. அ) செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளாக மொழியியலார் கூறுவனவற்றுள் எவையேனும் எட்டினை விளக்கி எழுதுக. (அல்லது)
   ஆ) தமிழரின் கனிமவியலறிவு, மண்ணியலறிவு, அணுவியலறிவு மற்றும் நீரியல் அறிவு குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

பகுதி - 2

49. பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. செய்யுள் வடிவில் விடை தருக : 2+2+3+3=10
   அ) 'இடிப்பாரை' எனத் தொடங்கும் குறள்.
   ஆ) 'பொழுது' என முடியும் குறள்.
   இ) 'துன்புள தெனின்' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
   ஈ) 'நல்லதாய்' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்